# அவசர நிலைக்கு ஒப்ப தமிழ்நாட்டு பட்ஜெட்!

VIDUTHALAI REGD-No: M.4789

விடுதலை

நிறுவனம்: 1935

திராவிடர் தமிழ்த் தினசரி.

மலர் 24] சென்னை: சுபகிருது மாசி மீ 18உ ❋ 2—3—63 ❋ சனி [இதழ் 268

## வருமானம் ரூ. 124·45 கோடி: செலவு ரூ. 127·19 கோடி: துண்டு ரூ. 2·74 கோடி

### புதியவரி எதுவுமில்லை; மத்திய விற்பனைவரி உயர்வு மூலம் துண்டு ஈடு கட்டப்படும்!

### திட்டவேலைகள் துரித முன்னேற்றத்திற்கான பல புதிய அம்சங்கள்!

## தமிழக பட்ஜெட் அறிவிப்பின் முக்கிய அம்சங்கள்

—:(❋):—

1. கிராம மின்விசை வசதி அபிவிருத்திக்கு என்று ரூ 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. சேலத்தில் புதிதாக ஒரு எஞ்சினியரிங் கல்லூரி நிறுவ அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது,

3. திருச்சியிலும் ஒரு பிராந்திய எஞ்சினியரிங் கல்லூரி அமைக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

4. மேலும் இரு புதிய பாலிடெக்னிக்குகள் (தொழிற் பயிற்சி மய்யம்) ஏற்படுத்தப்படும்.

5. பெண்களுக்கென்று தனியாக இரு பாலிடெக்னிக்குகள் நிறுவப்படும்.

6. புதிதாக 5 தொழிற்பயிற்சி நிலையங்கள் நிறுவப்படும் இவற்றில் நான்கு உளுந்தூர்பேட்டை, திருவண்ணாமலை, புதுக்கோட்டை, தூத்துக்குடி ஆகிய ஊர்களில் நிறுவப்படும்.

7. மருத்துவம், பொது சுகாதாரம் போன்ற துறைக்கு ரூ 5 கோடி 6 லட்சம் ஒதுக்கப்பட்டு அதற்கேற்ப திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

8. வீட்டுவசதித் திட்டங்களுக்கு ரூ. 77 லட்சம், சேரி அபிவிருத்திக்காக ரூ. 60 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

9. கைத்தறித் தொழிலில் வரும் சரிவை ஈடு கொடுக்க ரூ 1 கோடி 38 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

10. நாகர்கோயில், கும்பகோணம், சிவகங்கை ஆகிய இடங்களில் மூன்று தொழிற்பேட்டைகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

11. காவேரியாற்றில் அமையும் ஒகனேக்கல் திட்டத்திற்கு 58 கோடி செலவாகும். இத்திட்டம் 800 மெகாவாட் மின்சார உற்பத்தி திறனுடையது.

12. நீலகிரியில் ஃப்ரான்சு உதவியுடன் உருவாகி வரும் கச்சா படச் சுருள் தொழிற்சாலை அமைப்பு கணிசமாக முன்னேறி வருகிறது.

## யுத்த நெருக்கடி நிலையிலும் திட்டப்பணிகள் குறைப்பு இல்லை

### ரூ. 60 கோடி இதற்கென பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது

சென்னை, மார்ச் 2—

நேற்று சென்னை அசெம்பிளியில் தமிழகத்திற்கான 1963-64 ஆம் ஆண்டு பட்ஜெட்டைக்கொண்டுவந்து பேசிய நிதிஅமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள், நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் எதையும் யுத்த நெருக்கடியிலும் குறைக்கும் உத்தேசமில்லையென்றும், சிமெண்ட், இரும்பு முதலிய சாமான்கள் பற்றாக்குறையினாலும், திடீரென ஏற்பட்ட யுத்த நெருக்கடி நிலையாலும் கட்டிட வேலைகள் சிலவற்றைக் குறைத்திருப்பதைத் தவிர்த்து மற்ற அபிவிருத்தி வேலைகளுக்காக ரூ. 59 83 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அறிவித்தார்.

நிதி அமைச்சர் திரு பக்தவத்சலம் மேலும் குறிப்பிட்டதாவது:—

#### பொருளாதார பலமே தற்காப்புக்கு பேருதவி

நாட்டில் அவசர கால நிலைமை நீடித்திருந்தாலும் பொருளாதாரத்தை பலப்படுத்தக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களைக் கைவிடுவதற்கில்லை. அதற்கான முயற்சியையும் தளரவிடக்கூடாது. ஏனெனில் பொருளாதார அபிவிருத்தி மூலம் தான் நாட்டின் தற்காப்புத்திறனை வளர்க்க முடியும். பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக மின்விசை, போக்குவரத்து, முதலிய துறைகளில் அதிக முதலீடு செய்தல் அவசியமாகிறது.

எதிரிகள் மிகப்பலம் வாய்ந்தவர்களாக இருப்பதால் அவர்களை எதிர்த்துச் சமாளிப்பதற்கான படைபலத்தை நாமும் பெருக்கி வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது. இது தான் நாம் மேல்நாட்டிலிருந்து கற்கவேண்டிய பாடமாகும். நம்படையை எதிரிக்கு நிகராக அமைத்துக்கொள்வதில் பின்வாங்கலாகாது.

## நாளை இதழில்

கடலூர் மஞ்சை நகரில் 11-2-63-ல் நடந்த கழகக் கூட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் நிகழ்த்திய அறிவுரை வெளிவருகிறது.

#### உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களில் ரூ. 291 கோடி முதலீடு

மூன்றாம்திட்டக் காலத்தில் நாம் உற்பத்தியைப்பெருக்கும் வகையில் அமைத்துள்ள திட்டப் பணிகளுக்கு ரூ. 291 கோடி முதலீடு செய்ய திட்டமிட்டிருப்பதில் விவசாயம் தொழில் வளர்ச்சி, பாசனத் திட்டங்கள், தொழில்நுட்பக்கல்வி பயிற்சி போன்ற துறைகளுக்கு மட்டிலுமே ரூ. 195 கோடி ஒதுக்கியுள்ளோம் இன்றையநிலையில் இது மேலும் பரிசீலிக்கப்பட்டு உற்பத்தித்திட்டங்களுக்கு மேலும் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றோம்.

உற்பத்திமட்டுமின்றி பாதுகாப்புக்கும், அது சார்ந்த தொழில்களுக்கும் தொழில் நுட்பப்பயிற்சி பெற்றவர்கள் ஏராளமாகத் தேவைப்படுகிறது எனவே இப்பயிற்சியையும் துரிதப்படுத்த ஏற்பாடு செய்து வரப்படுகிறது.

#### சில கட்டிடத்திட்டங்கள் ஒத்திவைப்பு

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்சாரம், தொழில் நுட்பக்கல்வி இதற்கு அதிகதொகை ஒதுக்கப்படுகிறது

சிமெண்ட், இரும்பு போன்ற பற்றாக்குறைப்பண்டங்களைச் சேமிப்பதற்காக கட்டிட வேலைத்திட்டங்கள் சில தள்ளி வைக்கப்படுகின்றன. இதில் மிச்சப்படும் பணம் நாட்டின் தற்காப்பு முயற்சியுடன் இணைந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும். திட்டவேலைகட்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய உதவியில் 4 கோடி ரூபாய் அளவுக்கு குறைவு ஏற்பட்டபோதிலும் 3ம் திட்ட இறுதிகுள் நமது குறி எல்லையில் 58 சதவிகிதம் பூர்த்தியாவது நிச்சயம் நெருக்கடி நிலை காரணமாக நமக்கு புதுப் பொறுப்புக்களும் சுமருகின்றன மத்திய வெட்டு இருந்தாலும் நமது திட்டப்பணிகள் நிறைவேற்றியே தீருவோம்.

1961—62 ல் அபிவிருந்தித் திட்டச்செலவு ரூ 50 கோடியாக இருந்தது தற்போது ரூ. 58 கோடியாக அடுத்த ஆண்டு ரூ. 60கோடிக்கு உயர்ந்துள்ளது.

## நிதியமைச்சர் பக்தவத்சலம் விளக்கம்

சென்னை, மார்ச். 2—

அவசரநிலையையொட்டி மாநில அரசாங்கம் ஏற்றிருக்கும் பொறுப்புக்கிணங்க தமிழ்நாட்டு அரசாங்க பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது. வருவாய்க்குமேல் செலவேற்பட்டு; கணிசமாகத் துண்டு விழக்கூடியதாயிருந்தாலும் புதியவரிகள் எதுவும் விதிக்கப்படவில்லை. மத்திய அரசாங்க விற்பனைவரி வசூலைக் கொண்டு துண்டுவிழுதல் சரிக்கட்டப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.



பட்ஜெட்டில் கல்விக்கு கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டதைவிட அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பதோடு, திட்ட வேலைகள் துரிதமாக முன்னேற பல புதிய அம்சங்களுக்கான வழிவகைகளும் செய்யப்பட்டுள்ளன. தனியார் தொழில்துறைகளும், அரசு துறைகளும் நன்கு முன்னேற்றமடையவும் ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டு அரசாங்கத்தின் 1963-64 ஆம் ஆண்டுக்கான புதிய பட்ஜெட்டை நிதியமைச்சர் பக்தவத்சலம் நேற்று தமிழக சட்டசபையில் சமர்ப்பித்தார்.

வருவாய் ரூ. 124.45 கோடியெனவும், செலவு ரூ. 127.19- கோடியெனவும், ஆகவே ரூ. 2 74 கோடி துண்டு விழுமென்றும், அதற்காக புதிய வரிகள் எதுவும் விதிக்க அரசாங்கம் உத்தேசிக்கவில்லையென்றும் அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

அமைச்சர் பக்தவத்சலம் பேசுகையில் குறிப்பிட்டதாவது;

#### அவசர நிலைக்கு ஏற்ப தயாரிப்பு

"தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள அவசரநிலைக்காரணமாக மாநில அரசங்கம்பலபுதுப்பொறுப்புக்களைஏற்கவேண்டிநேர்ந்திருக்கின்றது தவிர மூன்றாவது அய்ந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் வேலைத் திட்டங்களும் துரிதமாக முன்னேறவேண்டியகட்டத்தை அடைத்திருக்கின்றன இந்த இரண்டு அம்சங்களும் தான் தற்போழுது அளித்துள்ள அடுக்க ஆண்டு பட்ஜெட்டில் பிரதியலிக்கின்றன,

#### புதிய வரி இல்லை

"ரெவின்யூ கணக்கில் துண்டு விழும் தொகை கணிசமாக இருப்பினும் நான் புதிதாக வரி எதையும் விதிப்பதாக உத்தேசிக்கவில்லை மத்திய விற்பனை வரி விகிதத்தை உயர்த்த இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த வரியை இந்திய அரசாங்கம் விதித்தாலும் அதை வசூலித்து பயனடைவது மாநில அரசாங்கம் தான் ஆகவே ரெவின்யூ கணக்கில்துண்டுவிழும்தொகையில் ஒரு பகுதியை இந்த வரியிலிருந்து கூடுதலாகக் கிடைக்கும் தொகை ஈடுசெய்யுமென எதிர்பார்க்கலாம்.

#### ஆடம்பரப் பொருள்கள்

தவிர கடந்த சில ஆண்டுகளில் மோட்டார் கார்கள், ஃபோட்டோ எடுக்கும் கருவிகள்போன்ற சில ஆடம்பரப் பொருள்களின்மீது ஒரேமாதிரி விகிதத்தில் விற்பனைவரி விதிக்கும் கொள்கையை மாநில அரசாங்கங்கள் பின்பற்றி வருகின்றன. மற்ற மாநிலங்கள் ஆடம்பரப்பொருள்களின்மீது விதிக்கப்படும் விற்பனை வரியை உயர்த்தினால் நாமும் அப்பொருள்களின்மீதுள்ள வரி விகிதங்களை மாற்றியமைக்க வேண்டியிருக்கும். அவ்வகையில் கொஞ்சம் அதிக வருவாய் கிடைக்கலாம்.

#### போலீசுப்படை-ஊர்க்காவல் படை

"நெருக்கடி நிலை காரணமாக போலீசுப் படைகளைப் பலப்படுத்தவும் அவைகளுக்குத் தேவையான தளவாடங்கள் போக்குவரத்து சாதனங்கள் முதலியவற்றை வாங்குவதற்கும் குறிப்பிட்ட சில பகுதிகளில் ஊர்க்காவல் படை அமைப்பதற்கும் ஆன பாதுகாப்புப்பணிகளுக்கு செலவு அடுத்த ஆண்டில் ரூ 85 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது போலீசுத்துறைகளின் மொத்த செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ 9 8 கோடியிலிருந்து 1963—64ல் ரூ 8. 11 கோடியாக உயரும்

#### கல்லூரிகளில் ராணுவப் பயிற்சி

கல்லூரிகளில் இராணுவப் பயிற்சி அளிப்பதற்காக கூடுதல் தேசிய மாணவர் படை அமைப்பு முயற்சிக்காக வருகிற ஆண்டில் ரூ. 57 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

#### மத்திய அரசு உதவி குறையும்

பாதுகாப்பிற்காக மத்திய அரசு கூடுதலாக நிதிவசதி செய்யவேண்டியிருப்பதால் மாநில அரசுகளுக்குத் தரும் உதவி ரூ. 450 கோடியிலிருந்து ரூ. 400 கோடியாகக் குறையும், ஆகவே நமக்கு தற்பொழுது கடனாகவும் மானியமாகவும் ரூ. 31 30 கோடி அளவிற்குத் தான் உதவி கிடைக்கும்.

#### திட்ட முக்கிய பகுதிகள்

"நம் நாட்டின் எதிரிக்கு நிகரான படை அமைப்பை உருவாக்க வேண்டுமெனில்திட்டத்தின் முக்கியமான பகுதிகள் எல்லாவற்றையும் நிறைவேற்றியே ஆகவேண்டும் மூன்றாவது அய்ந்தாண்டுத் திட்டத்தில் முதலீடு செய்வதாக உத்தேசித்துள்ள தொகை ரூ. 291 கோடியில் விவசாயம், தொழில் வளர்ச்சி, பாசனத் திட்டங்கள், தொழில் நுட்பக்கல்வி போன்ற துறைகளுக்கு மாத்திரம் ரூ. 195 கோடி ஒதுக்கியுள்ளோம்.

#### கட்டட வேலைகள்

கட்டிட வேலைத் திட்டங்களைப் பரிசீலனைசெய்து அலுவலகக் கட்டிடங்கள் பணியாளர்களுக்கான வீடுகள் போன்ற வேலைகளை ஒத்திபோட்டுள்ளோம். அல்லது குறைத்துக் கொண்டிருக்கிறோம். இம்மாதிரி மிகுதிப்படும் பணத்தையெல்லாம் நாட்டின் தற்காப்பு முயற்சியுடன் இணைந்த வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்த வகை செய்திருக்கிறோம்.

#### தொழில் நுட்பப் பயிற்சி

பாதுகாப்புப் படைகளுக்கும் அவற்றைச்சார்ந்த பலதொழில்களுக்கும் தொழில்நுட்ப பயிற்சி பெற்றவர்கள் தாராளமாகத் தேவைப்படுவதால் அவர்களுடைய பயிற்சிக்கான திட்டங்களைத் துரிதப்படுத்தவும் அரசாங்கம் நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளது வேளாண்மை சிறிய பாசனத் திட்டங்கள் மின்சாரம் தொழில் நுட்பக்கல்வி இவற்றிற்கு இப்பொழுது அதிக நிதி ஒதுக்கியுள்ளோம்,

நடப்பு ஆண்டில் முதலில் 3கோடியே12 லட்சமும்அடுத்த ஆண்டில் 3 கோடியே 65 லட்சமும் ஒதுக்கியிருக்கிறோம். குறிப்பாக, புதிய கிணறுகள் தோண்டும் உதவித் திட்டங்க

(3ம் பக்கம் பார்க்க)

| தமிழகத்தின் 1963-64க்கான பட்ஜெட் கண்ணோட்டம் | கோடி |
|---|---|
| வரவினங்கள் | ரூ...124.45 |
| செலவினங்கள் | ரூ...127,17 |
| எனவே துண்டு விழும் தொகை | ரூ— 2.74 |

## பெரியார் பொன்மொழி

" மக்களுக்கு கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம், பாசனத்திட்டங்கள் அபிவிருத்தி முதலிய வசதிகளைச்செய்யவேண்டுமானால் பணம வேண்டும். இதற்கு வரிவசூல் செய்தாகவேண்டும். வரிகள் போடுவதில் மக்கள் மகிழ்ச்சி அடையமாட்டார்கள்; வேதனைப்படுவார்கள். ஆயினும் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு மருந்து ஊட்டி நலம் செய்வதுபோல், அரசாங்கமும் வரிபோட்டு வசூலித்துவிடவேண்டியது அவசிய மாகும்."


# விடுதலை

சென்னை 2-3-63 சனி


# வரி விதிப்பும் விஷமப்பிரசாரமும்!

## (1)

நேற்று முன் தினம் பார்லிமெண்டில் மத்திய நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் 1963-64-ம் ஆண்டுக்குரிய பட்ஜெட்டை சமர்ப்பித்துள்ளார்.

சுமார் 267 கோடி ரூபாய் துண்டு விழும் அந்த பட்ஜெட்டில் ரூ. 275 கோடிக்கு புதுவரிகள் விதிக்கப்பட்டுள்ளன. வரலாறு காணாத வகையில் வரிவிதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை அவரே தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

வரவில் மிகக் கணிசமான பகுதி பாதுகாப்புச் செலவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 867 கோடி ரூபாய்களைப் பாதுகாப்புச் செலவுக்காக ஒதுக்கப்படுவது தேவையற்றது; மிகவும் அதிகம், என்று யாரும் கூறமுடியாது.

சீன ஆக்கிரமிப்புத்தொல்லையும், அதன் விளைவுகளும் இந்தத்துணைக் கண்டத்தை மிரட்டிக்கொண்டுள்ள நிலையில், இராணுவச் செலவுக்காக பெரும்பகுதி செலவிடப்படுவது எதிர்பார்க்கப்பட்டதே.

இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குமுன் மத்திய சர்க்காரின் மொத்த பட்ஜெட் தொகையே இவ்வளவுதான் இருந்தது!

பாதுகாப்புக்கண்ணோட்டம், யுத்த அபாயத்தை எதிர்நோக்கி அதற்கான ஆயத்தம் —இவைகளை முன் வைத்து பட்ஜெட் தயாரிப்பதால் முக்கிய திட்டங்களை வெட்டாமல், அதற்குவேண்டியவகையிலும் திட்டச் செலவுக்கான பெருந்தொகைகள் ஒதுக்கி வைத்துள்ளது மிகவும் திருப்தியளிக்கக்கூடிய ஒன்றாகும்.

இந்நிலையில் கூடுதலாக வரி விதிக்காமல் அரசாங்கம் வேறு என்ன செய்யமுடியும்? செலவினத்தை முதலில் கணக்கிட்டு அதற்கேற்ப வருவாயைத்தேடுவதுதானே அரசாங்கப் பொருளாதாரம்? தனி மனிதனின் பொருளாதாரத்திட்டம் இதற்கு மாறானது.

இந்நிலையில் வரவைவிடச் செலவு கூடுதலாக அமைவது வியப்பில்லை!

நெருக்கடி காலத்தில் பட்ஜெட் போடுவதற்கும், அமைதியான காலத்தில் பட்ஜெட் அமைப்பதற்கும் வேறுபாடு உள்ளது. வரிவிதிப்பு என்பது வெறும் வருமானப்பெருக்க மாத்திரமே இல்லை!

மக்களிடம் உள்ள வாங்கும் சக்தியை அரசாங்கம் கட்டுப்படுத்தவும் பண்டங்கள் விலை உயராமல் தடுக்கவும், இது ஒரு அத்தியாவசியமான முறையாகும்.

இந்த உண்மைகள் பாமர மககளுக்குத் தெரியாததனால் அவர்கள் வரிஎன்றவுடன்,மருந்தைக் கண்டு, ஓடி ஒளியும் குழந்தைகளாக இருக்கிறார்கள். ஆனால் பொருளாதாரத்தைக் கரைத்துக்குடித்துவிட்டு பேனாவைப்பிடிக்கும் பத்திரிகை ஆசிரியர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தெரியாமல் போனது ஏன்?

"தெரியும்; ஆனால் ஆட்சி மீதுமக்களுக்குவெறுப்புணர்ச்சியைத் தூண்டிவிடுவதற்குஇதைவிட பொன்னான சந்தர்ப்பம் வேறுகிடைக்காதே, என்னசெய்வது?" என்றுதான் அவர்கள் உண்மையாக பதில் சொல்ல வேண்டும். அதனால்தான் அரசியல் அவர்களது கடைசிப் புகலிடமாக இருக்கிறது!

இரண்டாவது உலகப்போர் நெருக்கடியில் வரிவிதிப்பு என்பதைத்தான் முக்கியகருவியாக இங்கிலாந்தும் மற்ற அய்ரோப்பியநாடுகளும் கையாண்டன என்பது எந்த பொருளாதார நூலைப் புரட்டினாலும் தெரியுமே !

வரிவிதிப்பில் எல்லா தர மக்களது காணிக்கையும் இருக்க வேண்டும். இப்போது கூடுதலாக வரி விதித்ததில் மண்ணெண்ணெய் விலை கூடுதலைத் தவிர வேறு எதுவும் பிரமாதமாக "ஏழைகளை"ப் பாதித்துவிடப்போவதில்லை.

எதற்கெடுத்தாலும் "ஏழைகள்" என்று கூறி, அவர்களுக்காக அரசியல் லாபவேட்டைக்காரர்கள் நீலிக் கண்ணீர் வடிப்பது நொண்டிப் பிள்ளையைக் காட்டி பிச்சை எடுத்து வாழ எண்ணும் சோம்பேறிகளது செயல் போன்றதேயாகும் !

சீனஅபாயத்தின்காரணமாக இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் இதுவரை எதை "தியாகம்" செய்துள்ளார்கள் ? தங்களது கேளிக்கை, ஆடம்பரம், சுகபோகம், —இவற்றில் ஒரு சிறு அளவுகூடக் குறைத்துக்கொள்ளவே இல்லையே !

# சுற்றுப்பயணம்



தஞ்சை மாவட்டம்

மார்ச்:

4 மாலை 4 மணிக்கு கீரக்களூர்
மாலை 6 மணிக்கு அம்மனூர்
5 எருக்காட்டூர் (காவாலக்குடி வட்டாரம்)
7 நாகை 8 பூவனூர்
9 மாயவரம் 10 மன்னார்குடி
11 சென்னை (எழும்பூர்) கைத்தறி வாரவிழா
12 திருவல்லிக்கேணி கடற்கரைக் கூட்டம்
13 வடசென்னை
14 மேற்கு சென்னை

'கழகமும் துரோகமும்' என்ற புதுவெளியீடும் மற்ற வெளியீடுகளும் கூட்டத்தில் கிடைக்கும்.

# பாக். நயவஞ்சகம் புரிந்துவிட்டது

## நம்மீது நல்லெண்ணமில்லாததற்கு சீனாவுடன ஒப்பந்தம் செய்வதே சான்று

## நேருவின் தாக்கு

கங்காநகர், (பாகிஸ்தான்) மார்ச், 2—

சீனா-இந்தியா எல்லைத்தகராறு தன் நாட்டிற்குச் சாதகமாக்கிக்கொள்ளவேபாகிஸ்தான் முயன்று வருகின்றது காஷ்மீர் எல்லையைப்பற்றி சீனாவுடன் பாக் ஒப்பந்தம் செய்துகொள்ளத் துணிந்ததிலிருந்து பாகிஸ்தானுக்கு நம்மிடம் நல்லெண்ணம் இல்லையென்பதைக் காட்டிவிட்டது. நாம் சமாதானமாக இருக்க விரும்புகிறோம். அதனால்தான் பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை நடத்தவும் சம்மதித்து துவங்கினோம். சீனாவுடன் நமக்கு ஏற்பட்ட தகராறைப் பயன்படுத்திக்கொண்டு அதன்மூலம்தான் லாபம்பெற முயலும் சீனாவின் வஞ்சகம் புரிந்துவிட்டது இருந்தும் நாம் பாகிஸ்தானுடன் நனடபெறும் பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து நடத்தவே ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று இங்கு நடந்த ஒருமாபெரும் பொதுக்கூட்டத்தில் பிரதமர் நேரு அறிவித்தார்.

## கல்விச் செலவு குறையாது

### எல்லாத் திட்டங்களும் மேற்கொள்ளப்படும்

சென்னை, மார்ச், 2—

நாட்டு நெருக்கடி காரணமாக கல்வி பயிலுவதற்கான வசதிகள் தடைப்பட்டுவிடுமோ என்று யாரும் பயப்படத் தேவையில்லை என்றும் அதன் வேகம் முன்னிலும் அதிகமாக இருக்கும் என்றும் தமிழக கல்வி அமைச்சர் திரு பக்தவத்சலம் கூறினார்,

இப்போது கல்விக்காக செலவிடப்படும் தொகை எக்காரணத்தைமுன்னிட்டும் குறைக்கப்பட மாட்டாது என்றும், இதற்கு மாறாக அடுத்த ஆண்டில் அதிகரிக்கப்படும் என்றும் கல்வியின் முன்னேற்றத்தில் தான் நாட்டின் வளர்ச்சி உள்ளதென்றும் அமைச்சர் கூறினார்.

சென்னையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் கழகங்கள் பயிற்சி பெற்று முடித்த சுமார் 2000 ஆசிரியர்கள் கூட்டத்தில் பேசுகையில்தான் அமைச்சர் மேற்கண்ட கருத்தினை தெரிவித்தார்.

## முன்னாள் குடியரசுத் தலைவர் மறைவிற்கு

### மேல் சபையிலும் அனுதாபம்

சென்னை. மார்ச். 2—

டாக்டர் ராஜேந்திர பிரசாத் இறந்ததை யொட்டு தமிழ்நாடு மேல் சபையில் ஒரு அனுதாப தீர்மானம் நிறைவேற்றப்பட்டது சர்க்கார் கட்சித் தலைவர் திரு ஆர் வெங்கட்ராமன் பட்ஜெட்டை அளித்த பின் மற்ற அலுவல்களைக் கவனிக்காமல் சபை ஒத்தி பே டப்பட்டது.

## நேருவுக்கு எதிரான துண்டு பிரசுரங்கள்

புதுடில்லி, மார்ச் 2—

நேருவுக்கு எதிராக பிரசாரங்கள் செய்யப்பட்ட பிரசுரங்கள் இந்தியாவுக்குள் ஏராளமாக வருவதை உள்துறை அமைச்சர் திரு. சாஸ்திரி உறுதிப்படுத்தினார்.

இந்த சுறையில் சுங்க அதிகாரிகளின் கவனம்ஈர்க்கப்பட்டுள்ளது என்றும், இனி இவ்விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து வருவதாகவும், அத்தகைய பிரசுரங்கள் கைப்பற்றப் பட்டால் அவைகளை கொளுத்திவிட அந்த அதிகாரிகளுக்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் ராஜ்யசபையில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் திரு. சாஸ்திரி கூறினார்.

## எவரெஸ்ட் வீரர் டென்சிங்

மாஸ்கோ, மார்ச், 2—

விளையாட்டுகளில் சிறந்து வெற்றிபெறுபவர்கட்குசோவியத் சர்க்காரால் கொடுக்கப்படும தங்கமெடலை இந்தியஎவரெஸ்டு வீரர்ஷேர்பா டென்சிங் பெற்றார் என்று சோவியத்டாஸ் செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது,

இந்த தங்கப்பதக்கத்தை முதல் முதலாக ஒரு இந்தியர் பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

டென்சிங் சோவியத் டெலிவிஷனில் பேசும்போது "ஷேர்பாக்களும் ரஷ்யர்களும் சேர்ந்து இமலாயமலைச் சிகரங்களில் ஏறும் நாள் வரும்" என்றுதாம் நம்புவதாகவும் கூறினார்,

# தமிழக கல்வி வளர்ச்சிக்கு ரூ. 28 கோடி செலவிடப்படும்

## கட்டாயக்கல்வித் திட்டம் தமிழகமெங்கும் இவ்வாண்டுக்குள் விஸ்தரிப்பு

## மதிய உணவு வழங்க ரூ. 1 கோடி 35 லட்சம்

சென்னை, மார்ச், 2—

நேற்று தமிழகத்தின் 1963-64-ம் ஆண்டுக்கான பட்ஜெட் கொண்டு வந்து அசெம்பிளியில் உரை நிகழ்த்திய நிதி அமைச்சர் திரு, எம். பக்தவத்சலம், மற்றெல்லா அபிவிருத்தித் துறைகளையும் விட கல்வித்துறைக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு சுமார் 27 கோடி 58 லட்சம் செலவிடத் திட்டமிட்டிருப்பதாக அறிவித்தார்.

ஏழைமாணவர்கட்கு மதியம் இலவச உணவு வழங்கும் திட்டத்துக்கு மட்டும் ரூபாய் ஒரு கோடி 35 லட்சம் செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார் அவர் மேலும் கூறியதாவது:—

### கல்வி வளர்ச்சியே முக்கியம் அதுதான் சமுதாய முதலீடு

நமது நாட்டில் கல்வி அபிவிருத்தியின் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டு வருகிறது அதுவும் நெருக்கடி நிலையிலும் கல்வி வளர்ச்சி குன்றாமல் பார்த்து வரப்படுகிறது கடந்த சில ஆண்டுகளில்தான் இத்துறையில் கவனம் அதிகம் செலவிடப்பட்டு செலவும் பெருமளவு செய்துவரப்படுகிறது.

1955-56 ல் நாம் கல்வித் துறையில் செலவிட்டது 10 கோடி 82 லட்சம் ரூபாய் இது வரும் ஆண்டில் 27கோடியே 58 லட்சம் செலவிடுகிறோம் நாம் இதை சமுதாய வளர்ச்சிக்சாக இடும் மூலதனம் என்று கொள்ளவேண்டும்.

### மாநிலமெங்கும் கட்டாயக்கல்வி

சமுதாயம் வளர கல்விதான் அடிப்படை நெருக்கடி காரணமாக இதன் வளர்ச்சி வேகம் தடைப்படலாகாது. இந்த ஆண்டு இறுதிகுள் மாநிலமெங்கும் கட்டாய ஆரம்பக் கல்வி அமுலுக்கு வந்துவிடும். 6-வயது முதல் 11-வயது முடிய சிறுவர் சிறுமியர் ஏற்கனவே 4 லட்சம் பேர் பள்ளியில் சேர்ந்துவிட்டனர் மேலும் 3லட்சம் பேர் சேர்க்கப்படுவார்கள். கல்வியின் பயனை மக்கள் அறிவதால் கல்வி விரைவில்பரவ ஏதுவாகியுள்ளது.

### மதிய உணவு வழங்குதல்

கல்வி விரைவில் பரவ மதிய உணவுத்திட்டம் உதவி புரிந்து வருகிறது. ஏழை மாணவர்க்கு மதியம் உணவு அளிப்பதைத் தொடர்ந்து செயலாற்ற பட்ஜெட்டில் 1 கோடியே 35 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது கேர் ஸ்தாபனம் தாராளமாக இதற்கு உதவிவருகிறது, 1 கோடி 5 லட்சம் பவுண்டு தானியமும் 80 லட்சம் பவுண்டு பால்பவுடரும் இனாமாக வழங்கியுள்ளனர் இதைச்சரியானபடி வழங்குவதற்கு ரூ. 13 லட்சம் செலவு செய்கிறோம். மதியஉணவு சரியானபடி வழங்கும் பொறுப்பு பஞ்சாயத்துக்களால் ஏற்கப்பட்டு வருகிறது.

அரசாங்கமும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு 11 கோடி 13 லட்சம் ரூபாய் ஆரம்பக்கல்வி செலவுக்காக மான்யம்அளித்து வருகிறது.

### உயர்நிலைக் கல்விக்கு ரூ 6.52 கோடி

உயர்நிலைக்கல்வியும் வெகுவாகப் பெருக்கப்பட்டு வருகிறது 10-ம் வகுப்பு வரை இலவசக்கல்வி அளிப்பதால் ஏழை மாணவர்களும் பள்ளி சேரும் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துவிட்டது.

### 2 ஆண்டுகளில் 480 உயர்நிலைப்பள்ளிகள்

கடந்த இரண்டுஆண்டுகளில் 480 புதிய உயர்நிலைப்பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் அதிகரித்து 6கோடி 52 லட்சம் ரூபாய் உயர்தரக் கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கும்பகோணத்தில் பெண்கள் கல்லூரி ஒன்று அடுத்த கல்வியாண்டில் துவங்கப்படும்.

### சமூக நலத்திட்டங்கள்

சமூக நலத்திட்டமான முதியோர் பென்ஷன் திட்டம் தொடங்கியதால்அதிகச்செலவு ஏற்பட்டுள்ளது முதியோர்கள் பென்ஷன் திட்டத்தினால் 40 ஆயிரம் பேர் உதவி பெறுகின்றனர் இதற்கு ரூ 1¼ லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் இவ்விதமான முக்கியமான செலவினங்களை சபை ஏற்குமென்று நம்புவதாகவும் கூறினார்.

# அம்மனூருக்குப் பெரியார் வருகை

4—3—63 திங்கள் மாலை 6 மணிக்கு

திராவிடர் கழகப் பொதுக்கூட்டம்

தலைவர்:

திருத்துறைப்பூண்டி வட்ட தி, க, தலைவர்

தோலி. திரு. இரா. சுப்பிரமணியம்

## தந்தை பெரியார் அவர்கள்

அறிவுரையாற்றுவார்கள்

அம்மனூர் தி. க.

குறிப்பு:— அம்மனூர் திருவாரூர், திருத்துறைப்பூண்டி பஸ் மார்க்கத்தில் கச்சனத்திலிருந்துமேற்கே 1½மைல். அம்மனூர் புகைவண்டி நிலையம் உண்டு

# தமிழர் இன இழிவு ஒழிந்து 100க்கு 100 கல்வி அறிவுபெற வாய்ப்பு தேடித்தந்தவர் பெரியாரே!

## வகுப்புவாரி உத்யோக உரிமைக்கும் போராடி வெற்றி கண்டார்

## சாதி மத ஆதிக்கத்துக்கும்கடவுள் மடமைக்கும் பெரியார் ஒரு வெடிகுண்டு

## அவரைக் கட்டுப்பாடாக பின்பற்றுவோம்! கருத்து வேறுபடுபவர் விலகட்டும்: சதிகாரர் கூற்றுக்கு எவரும் இணங்கோம் !!

### கடலூர் கூட்டத்தில் கழகந்தோழர்கள் உறுதி

கடலூர் மார்ச் 2—

கடலூர்மஞ்சைநகர் மைதானத்தில் நகர திராவிடர்கழகத்தின் சார்பாக மாபெரும் பொதுக்கூட்டம் 11—2—63 அன்று மாலை 6-30 மணி அளவில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு நகர தி கசெயலாளர் திரு. தம்பு அவர்கள் தலைமைவகித்து தந்தை பெரியார் அவர்களின் தொண்டினைப் பாராட்டிப் பேசினார்

**திரு. கோ. பாண்டுரெங்கன்**

அடுத்து கழகத்தோழர் திரு பாண்டுரெங்கன் அவர்கள்பேசுகையில், தமிழர்களை தன்மானத்துடன் தலைநிமிர்ந்து நடக்க உதவிய ஒப்பற்றத் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் ஆவார்கள் நமது இனம் இனஇழிவு ஒழிந்து கல்வி உத்யோகம் இதுகளில் முன்னேற்றம் அடைந்து வருகின்றது என்றால் இதற்குக் காரணமாக இருப்பவர் தந்தை பெரியார் அவர்களேயாவார் என்று எடுத்துரைத்தர்ர்கள்.

**நெல்லிக்குப்பம் திரு. சுப்பிரமணியம்**

அடுத்து தென்ஆர்க்காடு மாவட்ட தி. க. செயலாளர் திரு. மு. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

திராவிடர் கழகமானது தனது லட்சியத்தை முன்னிட்டு செய்யக்கூடிய கிளர்ச்சிகளில் அரசாங்கம் சட்டவிரோதம் என்று பிரகடனப்படுத்திய போதெல்லாம் அதற்காகப் பின்வாங்கியதில்லை. உடல் பொருள் ஆவியை இழக்கவும் சித்தமாகக்கொண்டு தீவிரமாக இறங்குகின்றவர்கள் ஆவார்கள்.

இன்றைக்கு கல்லூரிகளிலும் அலுவலகங்களிலும் நம்மவர்களும் ஓரளவுக்காவது காணப்படுகின்றார்கள் என்றால் இதற்குக் காரணம் தந்தை பெரியார் அவர்களின் உழைப்புத்தான் என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

**துரோகம் தலைதூக்குகின்றது**

இன்றைக்கு நமக்குக் கிடைத்தற்கு அரிய தலைவராக உள்ள தந்தை பெரியார் அவர்களுக்கும் வழக்கம்போல இன்றும் துரோகம் தலை தூக்குகின்றது. 1949-ல் விலகிய துரோகிகள் 5 லட்சத்தை விட்டுச் செல்வதாக கூறிச் சென்றார்கள். இன்றைக்கு உண்டாகி இருக்கும் துரோகிகள் கழகம் சீர்குலைந்துவிட்டது 30 லட்சத்தை விட்டுப் போகின்றோமே என்று ஆயாசப்படுகின்றார்கள் கழகம் தேய்ந்துவிட்டது என்று கூறுகின்றவர்களுக்கு கூறுகின்றேன் 5 லட்சமாக இருந்த கழகநிதியானது 30 லட்சமாக வளர்ந்து இருக்கின்றது என்று கூறினால் கழகம் வளர்ச்சி இருந்தால் தானே நிதியும்வளர்ந்து இருக்க முடியும் என்பதை உணரவேண்டும்.

**கட்டுப்பாடாக பெரியாரைப் பின்பற்றுக !**

தோழர்களே ! நாம் கட்டுப்பாடாக தந்தை பெரியார் அவர்களை பின்பற்றுபவர்களாக இருக்கவேண்டும் என்று எடுத்துரைத்தார்கள்.

**மஞ்சைநகர் திரு. தங்கவேலு**

தந்தை பெரியார் அவர்கள் மதத்துக்கு, கடவுளுக்கு ஒரு வெடிகுண்டு போன்றவர் ஆவார்கள். தன் மனதுக்கு சரி என்று பட்டதை மக்களுக்கு துணிந்து எடுத்துச்சொல்லும் ஒரேதலைவர் தந்தை பெரியார்அவர்கள்ஆவார், என்று கூறி, பெரியார் தொண்டு ஏற்படாவிட்டால் நம்மக்கள் நிலை எவ்வளவு கேவலமாக போய் இருக்கும் என்பதை நடுநிலையுடன் சிந்திக்கவேண்டும் என்றார். பெரியார் என்ன கூறினார்களோ கூறுகின்றார்களோ அதுகள் தான் இன்று நடைமுறைக்கு வருவதைப் பார்க்கின்றோம்.

சில தோழர்கள் இங்கு கருத்து வேறுபாடுகொண்டு இருப்பதாகக் கருதுகின்றேன் இதுகளைவிட்டு தந்தை பெரியாரின் கட்டளைப்படி அவரையே பின்பற்றி நடக்க வேண்டும், தலைக்கு தலை நாட்டாண்மை என்பது கூடவே கூடாது இந்த மனம்பான்மை ஒழியவேண்டும் என்று எடுத்துரைத்தார்.

**சிதம்பரம் திரு கு. கிருஷ்ணசாமி**

அடுத்து தென் ஆற்காடு மாவட்ட தி. க, தலைவர் திரு கு. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—தந்தை பெரியார் அவர்கள் நம்மக்கள் 100 க்கு 100 பேரும் படிக்கவேண்டும் என்று கூறுகின்றார்கள் என்றால் இன்று நேற்றுஅல்லகாங்கிரசில் இருக்கும்போதே கல்வி உத்யோகம் பதவி இதுகளில் வகுப்புவாரி உரிமை வேண்டும் என்று போராடி வந்து இருக்கின்றார்கள் இந்த பிரச்னைக்காகவே தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசில் இருந்து வெளியேறினார்கள்வெளியேறியும் இந்த லட்சியத்துக்காகவே பாடுபட்டுவந்து இருக்கின்றார்கள்.

**பெரியார் லட்சியம் காமராசர் ஆட்சியில் நிறைவேறியது**

இன்றைக்கு தந்தைபெரியார் அவர்களின் எண்ணத்தை இன்றைய காமராசர் ஆட்சியானது அமுல்படுத்துகின்றது இதற்கு நன்றியுள்ள தமிழர்களாக இருப்போமேயானால் தந்தை பெரியாருக்குத்தான் நன்றி செலுத்தவேண்டும்.

கழகமானது வெறும் பிரசார ஸ்தாபனமாக இருந்தாலும் அதன் பிரசாரத்தின் காரணமாக தானேஇன்றைக்கு நமக்குஉயர்நிலை ஏற்பட்டுள்ளதுஎன்பதை உணரவேண்டும்.

40 ஆண்டுகாலமாக தந்தை பெரியார் அவர்களுடைய பிரசாரமானது நமது சமுதாயத்தை அணு அணுவாக முன்னுக்குக் கொண்டு வந்து இருக்கின்றது இப்படிப்பட்ட கழகத்தில் அன்று முதல் பலவித குழப்பங்கள் கூச்சல்கள் ஏற்பட்டுக் கொண்டுதான் வருகின்றது. 1949ல் பிரிந்த அண்ணாதுரை கோஷ்டியானது தந்தை பெரியார் அவர்களின்திருமணத்தை சாக்காகக்கொண்டு பிரிந்து செல்ல நினைத்தபோது 5 லட்சம் பணத்தை விட்டுச் செல்லுகின்றோமே என்றார்கள் இன்றைக்கு ஏற்பட்டுள்ள துரோகிகள் 30 லட்சத்தை விட்டுப் போகின்றோமே என்கின்றார்கள் 49ல் 5லட்சமாக இருந்தது 1963ல் 30 லட்சம் ஆகின்றது என்றால் யாரால் ? சிந்திக்க வேண்டும். இந்த பணத்தை மணியம்மைக்கும் சம்பத்துக்கும் மற்றவர்களுக்கும் கொடுத்து விடுவார்கள் என்று விஷமமாகக்கூறி வருகின்றார்கள். தந்தை பெரியார் இப்படி கொடுக்க நினைத்துஇருந்தால் எப்படி 5 லட்சமானது 30லட்சமாக வளர்ந்து இருக்க முடியும்? சிந்திக்க வேண்டும் இப்படி கழகத்தின் சொத்தானது பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டு இருக்கின்றது என்றால் அது மணியம்மையானவர் தந்தை பெரியாருக்கு செய்த தொண்டின்காரணமாகவேதான் ஆகும்

இன்று புயலைக் கிளப்பும் தோழர் குருசாமியோ, வேதாசலமோ தங்களின் இப்படிப்பட்ட விஷமப்பிரசாரத்துக்கு மக்கள் செவிசாய்த்து தங்களோடு வருவார்கள் என்று எண்ணி இப்படி ஆரம்பித்து இருக்கின்றார்கள். இவர்கள் பின்னால்யார் செல்லப்போகின்றார்கள்? இவர்களுடைய கூற்றுக் கெல்லாம் பொதுமக்கள் தான் செவிசாய்ப்பார்களா ? என்று எடுத்துரைத்தார்.

**திரு. தம்பு விலகல் தாமே அறிவிப்பு**

அடுத்து கூட்டத்துக்கு தலைமை வகித்த திரு. தம்பு அவர்கள் எழுந்து "நான் நீண்ட நாளாகவே கழகத்தில் இருந்து கொண்டு தொண்டாற்றி வருகின்றேன். தந்தை பெரியார் அவர்கள் என்னைப்பற்றி சந்தேகப்படும்வகையில் கூறப்பட்டு இருக்கின்றேன்.

எனவே அய்யா அவர்களுக்கு என்மீது உள்ள சந்தேகமானது நீங்குகின்ற வரையில் நான் கழகத்தில் இருந்து விலகி இருந்து என்னால் ஆன தொண்டைச் செய்துவருகின்றேன்" என்று கூறினார்.

அடுத்து தந்தைபெரியா அவர்கள் நீண்டநேரம் அறிவுரை வழங்கினார்கள்.

(விவரம் நாளை வரும்)

---

## எருக்காட்டூருக்கு பெரியார் வருகை

### மனைகள் வழங்கும் விழா

5—3—63 செவ்வாய் மாலை 5 மணிக்கு

எருக்காட்டூரில்

தலைவர்:

காவலகுடி திரு. சா. மாரிமுத்து

**தந்தை பெரியார் அவர்களும்**

மற்றும் பலரும் பேசுவார்கள்

எருக்காட்டூர் கட்டிட மனையின் பட்டயத்தை

திரு. எஸ். கே. மூர்த்தியும்

கண்கொடுத்தவனிதம் கட்டிட மனையின் பட்டயத்தை

நத்தம் திரு. கி. இராசகோபாலும்

வழங்குவார்கள்.

அனைவரும் வருக.

தி. க. எருக்காட்டூர்,

காவலகுடி வட்டாரம், நன்னிலம் தாலுக்கா,

---

## அவசர நிலைக்கு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு ரூ. 97 லட்சம் கடன்களாகவும், ரூ. 16 லட்சம்மானியமாகவும் கொடுக்க வகை செய்துள்ளோம். பம்பு செட்டுகள் வாங்குவதற்காக வழங்கும் கடன் தொகையை1963-64 ல் 22.16 லட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம் இத்திட்டத்தின் கீழ் 245 எண்ணெய் எஞ்சின்களும் 1,800 மின்சார மோட்டார்களும்வழங்கப்படும்

**விவசாய உற்பத்தி வெற்றி**

திட்டத்தின் கீழ் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கானமுறை வெற்றி கண்டுள்ளது,

1961-62 ல் உணவு தானிய உற்பத்தி சுமார் 2,2 லட்சம் டன் அளவிற்கு அதிகரித்துள்ளது 3வது திட்டகாலத்தில்நம் குறிகோளான 17 லட்சம் டன் அதிக உற்பத்தி அளவை எய்தும் முயற்சிகலில் கவனம் செலுத்த வேண்டு .

**உரம் வழங்குதல்**

நடப்பு ஆண்டில் ஜனவரி வரை 2.03 லட்சம டன் அமோனியா சல்ஃ பேட்டிற்குச் சமமான உரம்விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது: அடுத்த ஆண்டிலும் இதேபோன்று உரம்கிடைக்கும் வாய்ப்பு இருக்கும்,

பசுந்தாள் உரவிதைகள் விநியோகத்தையும் 1963—64ல் 2750 டன்னிலிருந்து சுமார் 3000 டன்னாக உயர்த்த ஏற்பாடு செய்து வருகிறோம்,

பொறுக்கு விதை வழங்க நடப்பு ஆண்டில் 40 விதைப் பண்ணைகளையும் அடுத்த ஆண்டில் 34 பண்ணைகளையும் ஏற்படுத்த உத்தேசித்துள்ளோம்.

**பாசனத்திட்டம்**

தமிழகத்தில் இப்பொழுது நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களில் மிகவும் பெரியது பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டமாகும்.

1963-64 ல் இத்திட்டத்திற்கென 4 கோடியே 62 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்தவிர பாலாறு அணைக்கட்டு கால்வாய்கள் இவற்றின் சீரமைப்பிற்காக ரூ. 17.65 லட்சமும் சாத்தனூர் திட்டம் இரண்டாம் நிலைக்காக ரூ. 8,45 லட்சமும் ஒதுக்கியுள்ளோம் மற்ற நடுத்தரப் பாசனத் திட்டங்களில் மதுரை மாவட்டத்தில் மஞ்சளாறு திட்டமும் தென் ஆர்க்காடு மாவட்டத்தில்கோமுகி ஆற்றுத்திட்டமும் முறையே ரூ 66 லட்சம் செலவிலும் ரு 87 லட்சம் செலவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளன இந்த நடுத்தரத் திட்டங்களுக்காக ரூ 5 இலட்சம் அடையாள நிதி ஒதுக்கப்பட்டுள்ளது,

**கால்நடை வளர்ச்சி**

கால்நடை வளர்ப்புத் தொடர்பான பல்வேறு வேலைகளுக்காக, 1963-64 திட்டத்தில் ரூ. 55.56 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம், 1963-64 ல் 30 கால்நடை மருத்துவ மருந்துசாலைகளைத் திறக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். பொது மக்களுக்கும், இராணுவத்திற்கும் பெருமளவிற்கு தேவைப்படும் முட்டை உற்பத்தியை பெருக்குவது அவசியம். அடுத்த ஆண்டில் கோழி வளர்ப்பு நிலையங்கள் நான்கு ஏற்படுத்தப்படும் இத்துறையில் சுமார் எட்டரை லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பால் கூட்டுறவுச் சங்கங்கள்**

பால் வழங்கும் கூட்டுறவுச்சங்கங்களுக்குக் கறவை மாடுகளை வாங்குவதற்காக மொத்தம் சுமார் ரூ 37 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம்; மதுரை மாநகரிலும் ரூ 78 லட்சம் செலவில் பால் வழங்கும் திட்டம் ஒன்றை அமுல் நடத்த இருக்கிறோம்: இந்த திட்டத்திற்கு "யூனிசெப்" நிறுவனத்தினர் ரூ 31 லட்சம் மதிப்புள்ள எந்திர தளவாடங்களை இலவசமாக வழங்க முன்வந்துள்ளனர்.

**மீன் வளம்**

மீன் பிடிப்புத்தொழிலை நவீன விஞ்ஞான முறையில் சீரமைக்கும் நீண்ட காலத் திட்டத்தை ஒட்டி மீனவர்களுக்கு 100 எந்திரப் படகுகளை வழங்க சுமார் ரூ. 25 இலட்சம் ஒதுக்கியிருக்கிறோம். இராயபுரத்தில் படகு கட்டும் தொழிற்சாலை விரைவில் செயல்படத் தொடங்கும் தவிர மூன்று லட்சம் ரூபாய் மதிப்புள்ள நைலான் வலையும் மீனவர்களுக்கு வழங்கப்படும் கடலூர் மீன் பிடித் துறைமுக வேலை இப்போது பெரும்பாலும் முடிவு பெற்று விட்டது. நாகப்பட்டினம் மீன் பிடித் துறைமுகம் வேலை அடுத்த நிதி ஆண்டில் முடியும்.

**குடிநீர், இணைப்புச்சாலை, பள்ளிக்கட்டடங்கள்**

அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் கிராமக்குடிதண்ணீர் திட்டங்களுக்கு ரூ. 1.40கோடியும் இணைப்புச் சாலைகளுக்கு ரூ. 1.29 கோடியும்; பள்ளிக்கட்டடங்களுக்கு ரூ, 30 லட்சமும் ஒதுக்கியுள்ளோம்,

**பஞ்சாயத்து யூனியன்கட்கு மானியம்**

1963-64ல் விவசாயத் திட்டங்களை நிறைவேற்ற பஞ்சாயத்து யூனியன்களுக்கு ரூ, 69 லட்சம் மானியம் ஒதுக்கியுள்ளோம்,

**உழவர்களுக்குக் கடன் வசதி**

கிராம மக்களுக்கு நியாய ...டிக்கடன் வசதியாக உழவர்களுக்கு தக்காவிக்கடன் கொடுப்பதற்காக ரூ 2 கோடி ஒதுக்கியுள்ளோம் இது தவிர குறுகியகாவ கடன்களுக்கெனதொகை அடுத்த ஆண்டில் ரூ 40 கோடியாகும்,

**சர்க்கரை ஆலைகளில் பங்கு**

கள்ளக்குறிச்சியிலும்சமயநல்லூரிலும் அமையவிருக்கும்கூட்டுறவு சர்க்கரை ஆலைகட்குநடப்பு நிதியாண்டில் பங்கு மூலதனவகையில் உதவி அளித்திருக்கிறோம். வருகிற ஆண்டு மற்ற சர்க்கரை ஆலைகளில் பங்குகொள்ள ரூ 10 லட்சம் ஒதுக்கியுள்ளோம்,

**நெய்வேலித் திட்டம்**

அரசாங்கத்துறையிலுள்ள பல பெரிய திட்டங்கள் கணிசமாக முன்னேறியுள்ளன. இவற்றில் முக்கியமானது நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம்: பழுப்பு நிலக்கரியை மற்ற வேலைகளுக்குப் பயன்படுத்துவதோடு குறிப்பாக 250 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்யப்பயன்படுத்தப்படும்.

**மின்சார உற்பத்தி**

கடந்த இரு திட்டங்களிலுமாக நமதுமின்சாரஇணைப்பின்உற்பத்தித்திறன் பெருமளவிற்கு உயர்த்தப்பட்டும்தேவை அதையும் மிஞ்சிவிட்டதால்மேலும் உள்ள மின்சாரத் திட்டங்களை துரிதமாக நிறைவேற்ற ஏற்பாடு செய்துள்ளோம் வருகிற ஆண்டில் மின்சார உற்பத்தித்திட்டங்களுக்காக ரூ. 20 கோடியே 75 லட்சம் ஒதுக்கியுள்ளோம்,

**முதியோர் உதவி நிதி**

இதுவரை 40000 பேருக்கு முதியோர் உதவி நிதியளிக்கப்பட்டுள்ளதால் அடுத்த ஆண்டுக்குரிய வரவு—செலவுத்திட்ட மதிப்பீடுகளில் இதற்காக ரு 1,22 கோடி ஒதுக்கியுள்ளோம்.

மற்றும் சிறுதொழில்கள் கைத்தறி முதலியனவற்றைப் பற்றியும் அரசாங்கத்துரைத் திட்டங்கள் பற்றியும் தனியார் துறை பற்றியும அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

---

## குருஷ்சேவ்-ஆர்.கே. நேரு சந்திப்பு

மாஸ்கோ, மார்ச்- 2—

இந்திய வெளிநாட்டு விவகார அமைச்சக இலாகா பொதுக் காரியதரிசி திரு ஆர் கே நேரு நேற்று குருஷ்சேவை சந்தித்து 90 நிமிட நேரம் பேசினார்.

இந்த பேச்சு நட்புறவுடனும் பயன் தரத்தக்கதுமானமுறையில் இருந்தது என்று இந்திய தூதரக அதிகாரி ஒருவர் கூறினார்,